# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 8வது கூட்டம் ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் 27 - 09 -2009 அன்று மாலை 6.15 மணிக்கு பங்குத் தந்தையின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. அன்றைய கூட்டத்திற்க்கு திரு. விஜயகுமார் அகஸ்ரின் அவர்கள் சமூகம் தரவில்லை. கடந்த மாத கூட்ட அறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டது. அறிக்கையினை திரு. யூலியன் அவர்கள் முன்மொழிய, திரு. ஜீவன் அவர்கள் வழிமொழிய கூட்ட அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆலயத் திருத்த, வர்ணம் பூசும் வேலைகள் திட்டமிட்டதைப் பார்க்கிலும் நிறைவுவாக முழுமை பெற்றதையிட்டும், அவற்றில் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் இயக்குவதற்குரிய முன்னனுபவம் யாரிடமும் இல்லாதிருந்தும், எந்த ஆபத்துக்களும் இன்றி வேலைகள் முடிவுபெற்றதை இட்டும், முதலில் கடவுளுக்கு நன்றி தெரிவித்த பங்குத்தந்தை, பலரும், பலவழிகளிலும் ஒரு மறைத்தளக் குடும்பமாக நல்லுணர்வோடும், நல்லுறவோடும் பங்கெடுத்தமையைப் பாராட்டினார். தொடர்ந்தும் நமது மறைத்தளத்தை வளர்க்க இதே ஒற்றுமையுடன் உழைக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும், ஐப்பசி மாதம் முதல் வாரத்தில் தான் விடுமுறையில் செல்லவிருப்பதாகவும், அருட் தந்தை திபூசியஸ் நமது ஆலயத்தில் சில காலம் தங்கியிருப்பதால், எமது ஆன்மீகத் தேவைகளில் அவர் உதவிபுரிவார் என்றும் பங்குத் தந்தை கூறினார். மேலும், அண்மையில் நடந்தேறிய 'மறைக்கல்வி விழா' வும், அதையொட்டிய நிகழ்வுகள், கண்காட்சிகள் என்பன மாணவர்களை ஊக்குவிப்பதாக அமைந்ததாகவும், இவ்வாறான நிகழ்வுகள் மேன்மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும் அத்துடன், மறைக்கல்வி வகுப்புக்களை மாலையிலும் நடாத்த முடியுமா? என சில பெற்றோர்கள் வினவியதாகவும், தேவைப்படின் புதிதாக மறையாசிரியர்களாக பயிற்சி பெற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் பங்குத்தந்தை கூறினார்.

இவ்வருடம் ஒளிவிழாவைக் கொண்டாடுவதற்குரிய இடம் பற்றிக் கலந்துரையாடுகையில், இவ்வருடம் ஒளிவிழாவை ஒரு வெளி மண்டபத்தில் வைப்பது நல்லது என திரு. அலெக்கஸ் அவர்கள் கூற, அதை எமது மண்டபத்தில் வைத்தால், செலவினத்தைக் குறைக்கலாம் என திரு. அமிர்தநாதர் அவர்களும், திரு. றொபின் அவர்களும் கருத்துத் தெரிவித்தனர். இவ்விடயத்தை நிர்வாக சபையோடும், பங்கு மக்களோடும் கலந்தாலோசித்து முடிவுவெடுப்பதாக பங்குத் தந்தை கூறினார். எமது ஆலய வேலைகளைப் பார்த்து ஆயர் இல்லம் திருப்தியடைந்தாலும், எமது ஆலய வருமானத்தில் 9 விகிதத்தினை ஆயர் இல்லத்துக்கு நாம் செலுத்தவேண்டும் என்றும், இதற்கான கணக்கு விபரங்கள் தெரிந்தவர்கள் ஆலயத்தில் இருந்தால் எங்களுக்கு அதனைச் செய்ய இலகுவாக இருக்கும் என்றும் பங்குத்தந்தை கூறினார்.

## ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 27-09-2009

எமது ஆலயத்தின் வலப்புறம் இருக்கும் சிறிய மண்டபத்தை கொண்டாட்டங்களுக்கு இனிமேல் வாடகைக்கு விடுவதில்லை என்றும், ஏனைய இரு மண்டபங்களையும் வாடகைக்கு விடும் திகதி, நேரம் போன்ற விபரங்களை அதற்குப் பொறுப்பான அருட் சகோதரி கார்மேல் பங்குத் தந்தையிடம் கொடுக்க, அவ்விபரங்களை திரு. அல்பிரட், திரு. அமிர்தநாதர், திரு. தேவா, திரு. அலெக்ஸ், திரு. றொபின் இவர்களில் ஒருவர் பெற்று, அந்த நடவடிக்கைகளைக் கண்காணித்து, விபரங்களைச் சமர்ப்பிப்பதற்கு உதவியாக இருக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், ஆலய அலுவலக வேலைகள் மாலை 5.30 க்கு நிறைவுபெற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மறைத்தளத்தில் இடம்பெறும் போட்டி நிகழ்வுகளையொட்டி சில கசப்புணர்வுகள் ஏற்படுவதால், இத்தகைய போட்டிகள் அவசியம்தானா? எனக் கேள்வி எழுப்பப்பட்டதற்கு, அதைப்பற்றி பெற்றோருடன் ஒரு பொதுக்கூட்டம் வைத்துத் தீர்மானித்துக்கொள்ளலாம் என்றும், போட்டி பொறாமைகளைக் குறைத்துக் கொள்வதற்கான வழிகளை ஆராய்ந்து, பிள்ளைகளின் மறையறிவை நாம் வளர்க்க வேண்டும் என்றும், பங்குச் சபையின் கருத்துக்களோடு, பங்குமக்களின் கருத்துக்களையும் ஆராய்ந்து ஒளிவிழா நிகழ்வுகளை மேற்கொள்ளலாம் என்றும் பங்குத் தந்தை கூறினார். இறுதியாக திரு. அலெக்ஸ் அவர்களின் இறுதிச் செபத்தடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

| | |
|---|---|
| அருட்.தந்தை அன்றூ தவராஜசிங்கம் | திரு.நெல்சன் ஆரோக்கியநாதன் |
| பங்குத்தந்தை | செயலாளர் (பங்குச்சபை) |
| மீட்பின் அன்னை மறைத்தளம் | மீட்பின் அன்னை மறைத்தளம் |